**Greenpeace South Asia**
6th Floor, Access Towers 1, Union Place, Col 2
www.greenpeace.org/southasia/
17th August 2026

# இலங்கையின் கடலோர பகுதிகளை பாதுகாப்பதிலும் நிர்வகிப்பதிலும், பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் 'சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல்' நடைமுறைகளைக் கருத்திற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கும் கடிதம்.

இலங்கை கடற்றொழில், நீரியல் மற்றும் பெருங்கடல் வளங்கள் அமைச்சர்

கௌரவ கடற்றொழில் அமைச்சர்

திரு. இராமலிங்கம் சந்திரசேகர்

பிரதி:

சுற்றுச்சூழல் அமைச்சின் பல்லுயிர் திணைக்களம்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை (MEPA)

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் (CC&CRMD)

இலங்கை கடலோரக் காவற்படை (SLCG)

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் (NARA)

வணக்கம் ஐயா,

இலங்கையின் தேசிய பல்லுயிர் கொள்கைகளில், குறிப்பாக சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) நடைமுறையை அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம், பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் உரிமைகளை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதை மேலும் வலுப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை பணிவுடன் வலியுறுத்தி இந்த கடிதத்தை எழுதுகின்றோம். 2026ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான ஐ.நா. சாசனத்தின் 17ஆவது பங்குதாரர் மாநாட்டிற்காக (CBD COP17) உலக நாடுகள் தயாராகி வருகின்ற சந்தர்ப்பத்தில், 30x30 இலக்குகளை (2030 ஆம் ஆண்டிற்குள் 30 சதவீத நிலப்பரப்பையும் 30 சதவீத கடல் பகுதிகளையும் பாதுகாக்கப்பட்ட இடங்களாக மாற்றும் ஒரு உலகளாவிய சுற்றுச்சூழல் திட்டமாகும்) முன்னெடுப்பதில் இலங்கைக்கு ஒரு முக்கிய வாய்ப்பு கிடைத்துள்ளது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் கடலோர நிர்வாகத்திற்குள் மனித

உரிமை சார்ந்த அணுகுமுறைகளை உள்ளடக்குவதன் மூலம் இலங்கை இதில் முன்னிலையிலிருக்க முடியும். எந்தெந்த சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை பாதுகாக்க வேண்டும், எவ்வாறு பாதுகாக்க வேண்டும் மற்றும் யார் இதில் ஈடுபட வேண்டும் போன்ற முன்னுரிமைகளை சீரமைப்பதும் இதில் உள்ளடங்கும்.

காடுகள், கடல் மற்றும் கரையோர சுற்றுச்சூழல் அமைப்புகள் முழுவதிலும், பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் பாரம்பரிய நிர்வாக முறைகள், பாரம்பரிய அறிவு மற்றும் சமூகங்களால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடைமுறைகள் மூலம் ஏற்கனவே பல்லுயிர்களைப் பாதுகாத்து வருகின்றனர். எனினும், அரசியல், சட்டம் மற்றும் நிதி ரீதியாக இத்தகைய நிர்வாக முறைகளுக்கும் நடைமுறைகளுக்கும் இலங்கை இன்னும் போதிய அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கவில்லை.

**30x30** இலக்குகளை நோக்கிய முன்னேற்றமானது 'எவ்வளவு பரப்பு' என்பதால் மட்டுமல்லாமல், 'எவ்வளவு சிறப்பாக' மேற்கொள்ளப்படுகின்றது என்பதன் மூலமே அளவிடப்பட வேண்டும்.

பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் ஏற்கனவே உலகின் மிகச்சிறந்த பல்லுயிர் பாதுகாவலர்களாகவும், சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை பேணிப் பாதுகாப்பவர்களாகவும் உள்ளனர். எனவே, உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதும் சமூகங்களால் முன்னெடுக்கப்படுவதுமான பாதுகாப்பு அணுகுமுறை என்பது பல்லுயிர் பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவதற்கான இரண்டாம் நிலை அல்லது விருப்பத்திற்குரிய அணுகுமுறை அல்ல. மாறாக, குன்மிங்-மொன்றியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பை (KMGBF) நம்பகத்தன்மையுடனும் நீடித்த வகையிலும் நடைமுறைப்படுத்துவதற்கு இதுவே மிக முக்கிய அடிப்படையாகும்.

எனவே, கிரீன்பீஸ் தெற்காசியா அமைப்பானது, இலங்கை அரசாங்கத்திற்கு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது :

- அனைத்து தொழிற்துறை, கடலோர அபிவிருத்தி மற்றும் பல்லுயிர் பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பிலும் பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களிடம் வெறுமனே கருத்துக்களை கூறுவதோடு நிறுத்திவிடாமல், அவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பினை உறுதிசெய்யும் வகையில் ‘சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல்’ (FPIC) முறையை தெளிவான சட்டக் கட்டமைப்பின் மூலம் கட்டாயமாக்குதல்.

- சுற்றுச்சூழல் தொடர்பான மனித உரிமைப் பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 169வது உடன்படிக்கை, பழங்குடியின மக்களின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. பிரகடனம் மற்றும் நிலக் குத்தகை சொத்துக்களின் பொறுப்பான நிர்வாகம் குறித்த தன்னார்வ வழிகாட்டுதல்கள் உட்பட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக, பழங்குடியினர் மற்றும் உள்ளூர்

சமூகங்களின் முழுமையான பங்களிப்புடன் தேசிய சட்டங்களை ஒருங்கிணைத்து சீரமைத்தல்.

மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகள் ஏற்கனவே குன்மிங்-மொன்றியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பில் (KM-GBF) அங்கீகரிக்கப்பட்டுள்ளன (உதாரணம். இலக்கு 22) மற்றும் இவற்றை இப்போது நடைமுறையில் செயற்படுத்த வேண்டும். எனவே, பின்வரும் குறிப்பிட்ட பரிந்துரைகளின் மூலம், மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினை பயன்படுத்தி பல்லுயிர் இழப்பினை கட்டுப்படுத்துவதற்காக, உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான மாநாடு (CBD) மற்றும் KM-GBF ஆகியவற்றின் கீழ் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள உலகளாவிய உறுதிப்பாடுகளை நிறைவேற்றுமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

வலுவான சுற்றுச்சூழல் மற்றும் சமூக மதிப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மூலம் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சமூகங்களின் ஒப்புதலை உறுதிசெய்து, சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலுக்கான **(FPIC)** அடித்தளத்தை வலுப்படுத்துதல்

முதன்மையான முன்னுரிமையாக, சமூகங்களின் பங்களிப்பானது வெறுமனே கருத்துக்களை கோருவதோடு நின்றுவிடாமல், அவர்களின் உண்மையான பங்கேற்பினை உறுதிசெய்யும் நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும். இதன் மூலம், பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் உரிய நேரத்தில் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும், தீர்மானம் எடுக்கும் செயன்முறைகளில் உண்மையான முறையில் பங்கேற்பதற்கும், அவர்களின் நிலங்கள், நீர்வளங்கள், கலாசாரங்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் பாரம்பரிய உரிமைகளின் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குவதா அல்லது மறுப்பதா என்பதை தீர்மானிப்பதற்கும் உரிய வாய்ப்பு இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

- மின் உற்பத்தி உட்கட்டமைப்புகள் அல்லது கனிம அகழ்வு போன்ற முன்மொழியப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் மனித உரிமைகள் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து, சுயாதீன ஆய்வுகளை பயன்படுத்தி, சுற்றுச்சூழல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை பின்பற்றி விரிவாக மதிப்பீடு செய்யப்படுவதை உறுதிசெய்தல்.
- முன்மொழியப்படும் அனைத்து அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டங்களும் தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னரே வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் கட்டாயமான கலந்தாலோசனை மற்றும் ஒப்புதல் பெறும் செயன்முறைகளுக்கு

உட்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இந்த செயன்முறைகள் இலகுவில் அணுகக்கூடியதாகவும், கலாச்சார ரீதியாக பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.

- தற்போதுள்ள அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டங்களை மீளாய்வு செய்து, அவை தேசிய சட்டங்கள், சர்வதேச மனித உரிமை தரநிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுவதை உறுதிசெய்தல்.

கொள்கை மட்டத்தில், பயனுள்ள சமூக ஒப்புதலை பெற்றுக்கொள்வற்கு பின்வருவன அவசியமாகின்றன :

- இயற்கை வள நிர்வாகத்தில் சுற்றுச்சூழல் உரிமைகள் தொடர்பான எப்பாவல தீர்ப்பின் முக்கிய கொள்கைகளையும், 'சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல்' முறையையும் உள்ளடக்கும் வகையில் கொள்கை மறுசீரமைப்புகளை மேற்கொள்ளல்.

- முன்மொழியப்பட்ட அனைத்து திட்டங்கள் குறித்த தகவல்களை சமூகங்கள் பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல், நியாயமான பொது கலந்தாலோசனை செயன்முறைகளுக்கான நிபந்தனைகள் மற்றும் தகவலறிந்த ஒப்புதலுக்கான அளவுகோல்களை உறுதிசெய்தல், அத்துடன் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படும் பட்சத்தில் நீதி மற்றும் நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்பினை உறுதிசெய்தல் ஆகியவற்றை புதிய தேசிய கனிமக் கொள்கையின் ஒரு பகுதியாக உள்ளடக்குதல்.

- சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கான பாதுகாப்பினை மேலும் வலுப்படுத்துதல்.

இலங்கையில் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் சமூகங்களால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள நிர்வாகத்திற்கான அடித்தளங்களை வலுப்படுத்துதல்

- இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட தேசிய பல்லுயிர் மூலோபாய செயற்திட்டம் (NBSAP) உருவாக்கப்படும் நிலையில், பழங்குடியின மக்கள் மற்றும் சமூகங்களின் உரிமைகள் மற்றும் பங்களிப்புகள் தொடர்பாக குன்மிங்-மொன்றியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பில் (KM-GBF) புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட விதிமுறைகள் அதில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்வதுடன், அவற்றை திறம்பட செயற்படுத்துவதற்கான

நடைமுறைக்கு சாத்தியமான செயற்பாடுகளையும் உள்ளடக்குதல்.

- பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் முகாமைத்துவ திட்டங்களை மேலும் நடைமுறைக்கு ஏற்ற வகையில் மேம்படுத்தி, சமூகங்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் அவர்களை அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கும் பயனுள்ள, நியாயமான மற்றும் சமத்துவமான நடைமுறைகளை உறுதிசெய்தல்.

- பயனுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அடித்தளமாக, நிலங்கள், கடலோரப் பகுதிகள் மற்றும் இயற்கை வளங்கள் மீதான சமூகங்களின் உரிமை மற்றும் பாரம்பரிய உரிமைகளை அங்கீகரித்து பாதுகாக்கும் வகையில் சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

- குறிப்பாக கடற்றொழில், விவசாயம் மற்றும் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா ஆகிய துறைகளில், பல்லுயிர் பாதுகாப்பையும் நிலையான வாழ்வாதாரங்களையும் ஒரே நேரத்தில் வலுப்படுத்தும் வகையில், சமூகங்களால் முன்னெடுக்கப்படும் நிர்வாக முறைகளையும் சமூகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிர்வாக அணுகுமுறைகளையும் உறுதிசெய்தல்.

சமூகங்களால் முன்னெடுக்கப்படும் கடல் பாதுகாப்பு திட்டங்களை முன்னோடியாக செயற்படுத்துதல்

தீர்மானம் எடுக்கும் செயல்முறையின் மையத்தில் உள்ளூர் சமூகங்களை நிலைநிறுத்தி, அவர்களது தலைமையில் இயங்கும் கடல்சார் பாதுகாப்பு முன்னோடித் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம், இலங்கைக்கு இந்தத் துறையில் முன்னுதாரணமாக திகழ்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. சமூகம் தலைமை தாங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள், பல்லுயிரை மீட்டெடுப்பதுடன் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் நன்மை பயக்கும். சட்டப்பூர்வ அங்கீகாரம் அல்லது இணை நிர்வாக ஒப்பந்தங்களுடன், உள்ளூர் மட்டத்திலேயே வடிவமைக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் பகுதிகள் மூலம் பல்லுயிர் பாதுகாப்பையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் ஒன்றிணைக்க முடியும். இது வளங்களை பயன்படுத்துவது தொடர்பில் ஏற்படும் முரண்பாடுகளை குறைப்பதுடன், குறைந்த செலவிலான கண்காணிப்பையும் அமுலாக்கத்தையும் (சமூக அடிப்படையிலான ரோந்து நடவடிக்கைகள் மற்றும் உள்ளூர் வழிகாட்டுதல்கள்) சாத்தியமாக்கும். அத்துடன், மீன்பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட பகுதிகள் போன்ற மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நம்பகத்தன்மையையும் இது கட்டியெழுப்பும். இலங்கையில் சமூகம் தலைமை தாங்கும் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னோடியாக

**Greenpeace South Asia**
6th Floor, Access Towers 1, Union Place, Col 2
www.greenpeace.org/southasia/

செயற்படுத்துவதற்கு, பாரம்பரிய இணை நிர்வாக அணுகுமுறைகளுக்கு அப்பால் செல்ல வேண்டியது அவசியமாகும். இதன்மூலம், பாதுகாப்பு பகுதிகளின் வடிவமைப்பு மற்றும் நிர்வாகத்தில் சமூகங்களின் தீர்மானங்களும் செயற்பாடுகளும் முதன்மையானதாக இருப்பதை உறுதி செய்ய முடியும்.

மன்னார் தீவு மற்றும் கடல் மற்றும் கரையோர இடவியல் திட்டத்தின் (2024–2029) கீழ் விசேட முகாமைத்துவ பகுதிகளாக (SMAs) அடையாளம் காணப்பட்ட பகுதிகள் உட்பட ஏனைய கடலோர பகுதிகளில் சாத்தியமான முன்னோடித் திட்டங்களை ஆராயலாம். எந்தவொரு முன்னோடித் திட்டமும் அந்தந்த இடங்களுக்கான சமூகமட்ட கலந்தாலோசனைகள் மூலமாகவே உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு, பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களின் சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலின் (FPIC) அடிப்படையில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.

எனினும், இடங்களை தெரிவுசெய்தல், நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்களுக்கு, அந்தந்த இடங்களை சார்ந்த மேலதிக சமூக கலந்தாலோசனைகளும் உடன்பாடுகளும் அவசியமாகும். மேலும், இந்தப் பகுதிகளின் வடிவமைப்பு மற்றும் தொடர்ச்சியான நிர்வாகத்தில், சமூகங்களின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை மையப்படுத்துவதன் மூலம் தற்போதைய விசேட முகாமைத்துவ பகுதி (SMA) நடைமுறைகளை மேலும் மேம்படுத்த வேண்டும். இப்பகுதிகளுக்கான தேசிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பை உருவாக்குவதுடன், உள்ளூர் முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் பங்கேற்பு முறைகள் தொடர்பில் சமூகங்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம், சமூகம் தலைமை தாங்கும் பாதுகாப்புக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை பலப்படுத்த வேண்டும்.

தேசிய பல்லுயிர் பூகோள நடவடிக்கை திட்டத்தின் (NBSAP) தற்போதைய மீளாய்வின் ஒரு பகுதியாகவும், ஏனைய பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான (OECMs) தேசிய கட்டமைப்பினை உருவாக்குவதன் ஒரு பகுதியாகவும் இந்த பரிந்துரைகளை கருத்திற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை நாம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்நாட்டின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், தொழில்நுட்ப ரீதியான கலந்துரையாடல்கள், கலந்தாலோசனைகள் மற்றும் சரிபார்ப்பு செயன்முறைகள் ஊடாக ஒரு ஆக்கபூர்வமான பங்குதாரராக பங்களிக்கும் வாய்ப்பினை கிரீன்பீஸ் தெற்காசியா மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

இப்படிக்கு

கிரீன்பீஸ் தெற்காசியா

**Greenpeace South Asia**
6th Floor, Access Towers 1, Union Place, Col 2
www.greenpeace.org/southasia/